தினமலர்

# காய்கறி, பழங்கள் விலை உயர்வு எதிரொலி : பணவீக்கம் அதிகரிப்பால் அரசு பெரும் குழப்பம்

பதிவு செய்த நாள் : டிசம்பர் 31,2010,00:43

**வர்த்தகம்:** புதுடில்லி: காய்கறிகள், பழங்கள் விலை எப்போதும் இல்லாத வகையில் உயர்ந்துள்ளதால், உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம் 10 வாரத்தில் உச்சத்தை தொட்டுள்ளது.



வெங்காயத்தில் துவங்கிய ஏற்றம், பழங்கள் மற்றும் காய்கறிகள் உயர்வுக்கு காரணமாக அமைந்து விட்டது. இவற்றுடன் பால் விலையும் உயர்ந்துள்ளது. இதனால், உணவு பொருட்களுக்கான பணவீக்கம் தொடர்ந்து, ஐந்து வாரமாக உயர்ந்து விட்டது. கடந்த 18ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவு பொருட்களுக்கான பணவீக்கம் 14.44 சதவீதத்தை எட்டி விட்டது.இதுகுறித்து மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறுகையில், 'குறிப்பிட்ட சில உணவு பொருட்களின் விலை உயர்வால், உணவு பொருட்களுக்கான பணவீக்கம் உயர்ந்துள்ளது. இதை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம். வெங்காயத்தின் விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் பால், பழங்கள், காய்கறிகள் மற்றும் சில பொருட்களின் விலைகளில் ஏற்றம் இறக்கம் இருப்பதால் பணவீக்கத்தில் எதிரொலித்துள்ளது. மாதம் முழுவதிற்கான முழு

புள்ளி விவரத்தை எதிர்பார்க்கிறோம்.ஒவ்வொரு வாரமும் ஏதாவது காரணிகளால் வித்தியாசங்கள் இருக்கிறது. வரும் வாரத்தில் சரியாகும் என நினைக்கிறேன். நிதியாண்டின் இறுதிக்குள் பணவீக்கம் 6.5 சதவீதத்திற்குள் நிலைப்படும் என நம்புகிறேன்' என்றார்.பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக்குழு தலைவர் ரங்கராஜன், பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் நிதியாண்டின் இறுதிக்குள் 5.5 சதவீதமாக இருக்கும் என, கருத்து தெரிவித்திருந்தனர். ஆனால், அதை விட அதிகமாக தான் இருக்கும் என, பிரணாப் முகர்ஜி கருத்து தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.உணவுப் பொருட்கள் பணவீக்கம் இந்த அளவுக்கு உயர்ந்ததற்கு, பெட்ரோல் விலை லிட்டருக்கு மூன்று ரூபாய் உயர்ந்ததும் முக்கிய காரணியாக சொல்லப்படுகிறது. தவிரவும் பால் பவுடரை இறக்குமதி செய்து, அதனால் நாட்டின் பால் தேவையை சீராக்க நினைக்கும் அரசு செயல் பால் விலை உயர காரணமாகி விட்டது. அத்துடன் ஐக்கிய அரபு நாடுகளுக்கு எருமை இறைச்சி ஏற்றுமதியை ஊக்குவிப்பதும் கறவையினங்கள் எண்ணிக்கை குறைய வழி வகுக்கும்.

இந்தளவிலேயே செல்லும்பட்சத்தில், மத்திய ரிசர்வ் வங்கி அடுத்த மாதம் அறிவிக்கவுள்ள நிதி கொள்கையில், குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதங்களில் 25 சதவீதம் உயரும் என தெரிகிறது.அதேபோல், டீசல், காஸ் சிலிண்டர் விலையை உயர்த்துவதையும் அரசு தள்ளி வைத்திருப்பது இந்த விலை உயர்வு எதிரொலி என்று கூறப்படுகிறது. வரும் 2011ல் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வு மத்திய அரசுக்கு கடும் சவாலை கொடுக்கும் என, பொருளாதார வல்லுனரான டி.கே. ஜோஷி கூறினார்.ஒட்டு மொத்த பணவீக்கம் எவ்வளவு என்ற புள்ளி விவரம் மாதந்தோறும் வெளியிடப்படுவதால், வாரம்தோறும் வெளியாகும் உணவு பொருட்களுக்கான பணவீக்கம் முக்கியமாக கருதப்படுகிறது. கடந்த அக்டோபரில் ஒட்டு மொத்த பணவீக்கம் 8.58 சதவீதமாக இருந்தது. நவம்பரில் 7.48 சதவீதமாக குறைந்தது.தற்போது உணவு பொருட்கள் பணவீக்கம் அதிகரித்து வந்துள்ளதால், ஒட்டு மொத்த பணவீக்கம் மீண்டும் இரட்டை இலக்கத்தை தொடும் என்ற அபாயம் ஏற்பட்டுள்ளது.மேலும் அதிக நிதிப்பற்றாக்குறையை சமாளிக்கும். நிதியமைச்சக நடவடிக்கைகள் நீர்த்துப் போகும்

வகையில் பணவீக்க பாதிப்பு மிரட்டுகிறது. இது சேமிப்பின் அளவையும் குறைக்கும், அத்துடன் உணவுப் பொருள் இறக்குமதியை அதிக அளவில் நம்பும் பொருளாதாரமாக மாற்றும் என்றால் அதனால் சிக்கல் அதிகரிக்குமே தவிர குறையாது.

**விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கூச்சல் குழப்பம் : டி.ஆர்.ஓ.,விடம் நேரடி வாக்குவாதம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 30,2010,02:12 IST

நாமக்கல்: நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்ற விவசாயி ஒருவர், டி.ஆர்.ஓ.,விடம் நேரடி வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. மேலும், கூட்டத்தில் ஏற்பட்ட கூச்சல் குழப்பமும், விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. டி.ஆர்.ஓ., சீத்தாலட்சுமி, வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன் உட்பட அதிகாரிகள் பலர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

விவசாயிகள் பலர் தங்களது குறைகளை தெரிவித்தனர்.அவற்றுக்கு டி.ஆர்.ஓ., சீத்தாலட்சுமி நேரடியாகவும் துறை அலுவலர்கள் மூலமாகவும் விளக்கமளித்து பேசினார். கூட்டத்தின் முன்வரிசையில் அமர்ந்திருந்த விவசாயிகள் மட்டும் தங்களது குறைகளை தெரிவித்தபடி இருந்தனர். அதனால் பின்வரிசையில் அமர்ந்திருந்த விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கம் சார்ந்த விவசாயிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படாமல் இருந்தது.அதை கவனித்த டி.ஆர்.ஓ., சீத்தாலட்சுமி, பின் வரிசையில் இருப்பவர்கள் குறை எதுவும் தெரிவிக்கவில்லையே எனக் கேட்டார். அப்போது சிலர் எழுந்து நின்று பேச முயன்றதால், கூச்சல் அதிகரித்தது. அவர்களை சமாதானப்படுத்த முயற்சித்தும் பலனளிக்காததால், மனுக்களை அளிக்கும்படி டி.ஆர்.ஓ., தெரிவித்தார்.அதையடுத்து கூட்டத்தில் பங்கேற்ற

விவசாயிகள் தங்களது குறைகள் தொடர்பான புகார் மனுக்களை கொடுத்தும், குறைகள் குறித்து நேரிலும் விளக்கிக் கூறினர். மேலும், கூட்டத்தில் எழுந்து பேசியவர்களது கருத்தையும், டி.ஆர்.ஓ., சீத்தாலட்சுமி கேட்டுக் கொண்டிருந்தார்.அப்போது விவசாயிகள் பகுதியில், "இங்கு கொடுக்கும் மனு மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை' என, தங்களுக்குள் பேசி கூச்சல் போட்டபடி இருந்தனர். "என்ன அங்கே சத்தம்' என கேட்டு, அவர்களை டி.ஆர்.ஓ., சீதாலட்சுமி அமைதிபடுத்த முயற்சித்தார்.

அதில் ஆத்திரமடைந்த கூட்டத்தின் இரண்டாவது வரிசை ஓரத்தில் அமர்ந்திருந்த விவசாயி ஒருவர், "ஒன்னா மனு வாங்குங்க அல்லது கூட்டத்தில் விவசாயிகள் தெரிவிக்கும் குறையை கேளுங்கள். இரண்டையும் ஒரே சமயத்தில் செய்வது எந்த விதத்தில் நியாயம்' என, விரலை நீட்டியபடி வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.அவரை பிற அதிகாரிகள் சமாதானம் செய்ய முயற்சிக்காததால், கோபமடைந்த டி.ஆர்.ஓ., சீத்தாலட்சுமி, "இங்கே என்ன பிசினஸா பேசுகிறோம். விரலை எதற்காக நீட்டி பேசுகிறீர்கள்' எனக் கேட்டார். அதையடுத்து அங்கிருந்த அதிகாரிகள் சம்மந்தப்பட்ட விவசாயியை எச்சரித்து அமரச் செய்தனர். அதற்கு சளைக்காத விவசாயி, "இனிமேல் கை கட்டியபடி பேசுகிறோம்' என, சைகை மூலம் செய்து காட்டினார்.அதனால் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. அதன்பின், விவசாயிகள் தெரிவிக்கும் குறைகள் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்களும், டி.ஆர்.ஓ.,வும் நேரடியாக பதில் அளித்தனர்.

**மஞ்சள் அறுவடைக்கு பின் தொழில்நுட்பம் : வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 31,2010,02:12 IST

தர்மபுரி: மஞ்சள் அறுவடைக்குப் பின் செய்ய வேண்டிய வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து தர்மபுரி வேளாண் துணை இயக்குனர் (பொ) நாகராஜன் அறிவுரை வழங்கியுளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:தர்மபுரி மாவட்டத்தில் எட்டு ஒன்றியங்களில் 25 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்துள்ளனர். மஞ்சள் நல்ல வருவாய் தரக்கூடிய பணப்பயிராகும் என்பதால் மஞ்சள் அறுவடைக்குப் பின் வேளாண் தொழில் நுட்ப நேர்த்திகளை கடைபிடிக்க வேண்டும்.மஞ்சள் சுமார் ஒன்பது முதல் 10 மாதங்களில் அறுவடைக்கு வரும் பயிர். இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, காய்ந்து விழும்போது பயிர் முதிர்ச்சியை தெரிந்து கொள்ளலாம். மஞ்சள் பயிரின் தண்டை 10 நாட்களுக்கு முன்பாக தரையில் மேல் மட்டத்தில் 10 செ.மீ., விட்டு அறுக்க வேண்டும். இதனால் மஞ்சளின் ஈரப்பதம் குறைவதுடன் விரைவில் முதிர்ச்சி அடையும்.மஞ்சள் கொத்து என்ற கருவியை பயன்படுத்தி மஞ்சளை கொத்தி எடுத்த பின் நேர்த்தியாக பதப்படுத்த வேண்டும். ஈர மஞ்சளில் ஐந்தில் ஒரு பகுதி பதப்படுத்திய மஞ்சளாக கிடைக்கும். பச்சையான மஞ்சளை சுத்தமான நீரில் வேக வைக்கும் போது மஞ்சள் வாசனை வைத்து மஞ்சள் வெந்து விட்டதை அறியலாம்.விரல் வைத்து மஞ்சளை அழித்தி வெந்து விட்டதை உறுதிப்படுத்த வேண்டும். மஞ்சள் சரியாக வேகவில்லையென்றால் காயவைக்கும் போது சிறு சிறு துண்டுகளாக உடையும். வேகவைத்த மஞ்சளை வெயிலில் ஏழு செ.மீ., உயரத்திற்கு பரப்பி 15 நாட்கள் வரை உலர விட வேண்டும்.விரலி மஞ்சள் இலகுவாக முறிய கூடாது. காயவைக்கப்பட்ட மஞ்சளில் சிறு, சிறு வேர்களும் செதில்களும் கலந்து இருந்தால் அதனை சுத்தப்படுத்த வேண்டும். மஞ்சள் மெருகேற்றுவது மிகவும் அவசியம். மெருகேற்றும் கருவியைக் கொண்டு மஞ்சள் மெருகேற்ற வேண்டும்.மஞ்சளுக்கு நிறமேற்றுவது மிகவும் அவசியம். 100 கிலோ

மஞ்சளை மெருகேற்ற படிகாரம் 40 கிராம், மஞ்சள் தூள் இரண்டு கிலோ, ஆமணக்கு எண்ணெய் 140 கிராம், சோடியம் பை சல்பேட் 30 கிராம் ஹைட்ரோ குளோரிக் அமிலம் 30 மில்லி சேர்த்து தயாரிக்கப்பட்ட கரைசலை கொண்டு நிறம் ஏற்றலாம். மஞ்சள் கொடியுடன் ஆல்கஹால் சேர்த்து கரைசல் தயாரித்து மஞ்சளுக்கு நிறம் ஏற்றலாம். மஞ்சளை தரம் பிரிப்பதன் மூலம் நல்ல லாபம் பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**இலவச மின்சார விதிமுறைகள் தளர்த்த மாவட்ட பஞ்., கூட்டத்தில் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 30,2010,01:38 IST

தர்மபுரி: "தமிழக அரசு விவசாயிகளுக்கு வழங்கும் இலவச மின்சார திட்டத்துக்கான விதிமுறைகளை தளர்த்த வேண்டும்' என தர்மபுரி மாவட்ட பஞ்சாயத்து குழு கூட்டத்தில் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.தர்மபுரி ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் மாவட்ட பஞ்சாயத்து தலைவர் வெங்கடேஸ்வரன் தலைமையில் சாதாரண கூட்டம் நடந்தது. கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:ராஜா (ம.தி.மு.க.,): விவசாயிகளுக்கு வழங்கும் இலவச மின்சாரத்துக்கு அதிகமான கட்டுப்பாடுகளை மின்வாரியம் விதிக்கிறது. இதனால், கிராமப்புற விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். புதிய விதிமுறைகள் குறித்த விவசாயிகளுக்கு எவ்வித விழிப்புணர்வு இல்லாததால், மின் இணைப்புக்கு விண்ணப்பித்து காத்துகிடக்கின்றனர். விதிமுறைகளை அரசு தளர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.மாவட்ட பஞ்சாயத்து தலைவர் வெங்கடேஸ்வரன்: தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பபடும்.சாக்கன்சர்மா (வி.சி.,): தர்மபுரி மாவட்ட பஞ்சாயத்துக்கு அரசு வழங்கும் நிதி ஒதுக்கீடு குறித்து பதிவேடுகள் மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதில் திட்ட வளர்ச்சிக்காக செலவு தொகை குறித்து மாவட்ட பஞ்சாயத்து நிர்வாகம் தெரிவிக்க வேண்டும்.தமிழ்செல்வி (தி.மு.க.,): எட்டு ஒன்றியங்களில் கடந்த நான்கு ஆண்டுகளில் திட்ட பணிகளுக்காக செலவு தொகை மற்றும் சேமிப்பு தொகை குறித்து தெரிவிக்க வேண்டும். மாவட்ட பஞ்சாயத்து செயலர் கூட்டத்தில் கலந்து கொள்ளாதற்கு காரணம் தெரிவிக்க வேண்டும்.வெங்டேஸ்வரன்: ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்ட

திட்டப் பணிகளில் சேமிப்பு தோராயமாக 50 லட்சம் இருக்கும். இந்த நிதியை பயன்படுத்தி புதிய திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். மாவட்ட பஞ்சாயத்து செயலர் தனது சொந்த வேலையாக விடுப்பில் உள்ளார்.இவ்வாறு விவாதம் நடந்தது.

**ரூ.10 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 31,2010,01:38 IST

வெள்ளகோவில்: வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொப்பரை ஏலம் நடந்தது. இவ்வாரம் 416 மூட்டை வரத்தாக இருந்தது; கடந்த வாரத்தை விட விலை அதிகரித்தது. முதல் தரம் 59.35; இரண்டாம் தரம் 42.25 என விலை நிர்ணயிக்கப்பட்டது. திருச்சி, கரூர், மயிலரங்கம், அந்தியூர், வாணியம்பாடி பகுதிகளை சேர்ந்த 50 விவசாயிகள், கொப் பரையை ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர்; தரம் இல்லாததால், 10 மூட்டை கொப்பரை ஏலம் விடாமல் எடுத்துச் செல் லப்பட்டது. 10 லட்சத்து 91 ஆயிரத்து 575 ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

**வெளிமார்க்கெட்டில் காய்கறி விலை சர்ர்: உழவர்சந்தைக்கு படையெடுக்கும் மக்கள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,01:20 IST

திருச்சி: வெளிமார்க்கெட்டில் காய்கறிகள் அதிக விலைக்கு விற்கப்படுவதால், உழவர்சந்தைக்கு மக்கள் படையெடுக்கத் துவங்கியுள்ளனர். இதனால், உழவர்சந்தையின் விற்பனை இரட்டிப்பாகி உள்ளது. கடந்த சில நாட்களாக காய்கறிகளின் விலை உச்சத்தில் உள்ளது. கார்த்திகை மாதம் ஐய்யப்ப பக்தர்களின் சீஸன் காரணத்தால் காய்கறி நுகர்வு அதிகரித்துள்ளது. தவிர, மழையால் பெரும்பாலான காய்கறிகள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வெங்காயம் பயிர்கள் அதிகளவு சேதமடைந்துள்ளன. இதனால், அனைத்து காய்கறிகளின் விலையும் வழக்கத்தை விட மூன்று மடங்கு உயர்ந்துள்ளதால், பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர். "தகிக்கும் தக்காளி', "கண்ணீர் வரும் வெங்காயம்', "ஜெட் வேகத்தில் கத்திரிக்காய்', "கசக்கும் அவரைக்காய்', "முறுக்கும்

முறுங்கக்காய்' என கூறும் அளவுக்கு காய்கறி விலை உயர்ந்துள்ளது. வெளிமார்க்கெட்டில் காய்கறி விலை தாறுமாறாக உயர்ந்து காணப்பட்டாலும், உழவர்சந்தைகளில் காய்கறி விலை சற்று நிதனாமாகவே உள்ளது. காய்கறி வாங்க உழவர் சந்தைக்கு பொதுமக்கள் படையெடுக்கத் துவங்கியுள்ளதால், உழவர் சந்தை விற்பனை இரட்டிப்பாகி உள்ளது. திருச்சி அண்ணாநகர் உழவர்சந்தையில் நேற்றைய நிலவரப்படி காய்கறிகளின் ஒரு கிலோ விலை: கத்தரிக்காய் 26, 20, அவரைக்காய் 44, 38, வெண்டை 22, கொத்தவரங்காய் 18, புடலை 20, 18, பீர்க்கங்காய் 20, 18, பாவற்காய் 20, 18, முருங்கை 60, முள்ளங்கி 18, தட்டைகாய் 16, மாங்காய் 36, 26, பரங்கி, பூசணி, சுரை 10, பச்சைமிளகாய் 26, கொத்தமல்லி 15, புதினா 8, கருவேபிள்ளை 28, இஞ்சி 34, கருணை 20, சேனை 22, சேப்பங்கிழங்கு 24, சின்னவெங்காயம் 25, 20, மொச்சை 40, பெரியவெங்காயம் 44, 34, உருளை 20, 14, கேரட் 44, பீன்ஸ் 36, முட்டை கோஸ் 16, 14, சவ்சவ் 12, பீட்ரூட் 22. இதே காய்கறிகள் வெளிமார்க்கெட்டில் 50 சதவீதம் கூடுதல் விலைக்கு விற்கப்படுகின்றன. வெளிமார்க்கெட்டில் மணப்பாறை கத்திரிகாய் ஒரு கிலோ 60, வெண்டை 30, புடலங்காய் 25, அவரை 48 ரூபாய் என விற்கப்படுகிறது

**விவசாயத் தொழிலாளர் சங்கம் புதுகையில் திடீர் போராட்டம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,01:11 IST

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் பொது அலுவலக வளாகத்தில் உள்ள ஆர்.டி.ஓ., அலுவலகம் முன் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில், முற்றுகை போராட்டம் நேற்று காலை 10 மணியளவில் நடந்தது. மாவட்ட செயலாளர் சுந்தராசன் தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் முருகானந்தம், மாவட்ட துணை தலைவர் நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆலங்குடி எம்.எல்.ஏ., ராஜசேகரன் போராட்டத்தை துவக்கி வைத்தார். இதில், கலெக்டர் மற்றும் தாசில்தார்களிடம் பட்டா கேட்டும், வீட்டுமனை கேட்டும் வழங்கப்பட்ட மனுக்களை பரிசீலித்து உரிய காலத்தில் வழங்கவும், குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கும் உடனே வழங்கவும், பழுதடைந்த தொகுப்பு வீடுகளை

புதுப்பிக்க போதுமான நிதி ஒதுக்கீடு செய்யக் கோருவது உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைத்து போராட்டம் நடந்தது. மாவட்ட பொருளாளர் தங்கையன் நன்றி கூறினார்.

**ஆகாயத்தாமரையை கட்டுப்படுத்த வண்டுகள் சமுத்திரம் ஏரியில் விட்டு கலெக்டர் துவக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 31,2010,02:04 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூர் அருகே காட்டுத்தோட்டத்தில் உள்ள சமுத்திரம் ஏரியில் இயற்கை முறையில் வண்டுகள் மூலம் ஆகாயத்தாமரை கட்டுப்படுத்தும் திட்டத்தினை கலெக்டர் சண்முகம் துவக்கி வைத்தார். இதற்காக ஆயிரம் வண்டுகள் சமுத்திரம் ஏரியில் விடப்பட்டது.இத்திட்டத்தை துவக்கிவைத்து கலெக்டர் சண்முகம் பேசியதாவது:இந்தியா முழுவதும் இரண்டு லட்சம் ஹெக்டேர் நீர்நிலைகளில் ஆகாயத்தாமரை பரவியுள்ளது. ஆகாயத்தாமரையை வண்டு மூலம் கட்டுப்படுத்தும் திட்டம் முதன் முதலில் தென் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியாவில் 1986ம் ஆண்டு கர்நாடகாவிலும், 1990ல் கேரள மாநிலத்திலும், இம்முறை செயல்படுத்தப்பட்டது.தஞ்சாவூரில் உள்ள காட்டுத்தோட்டத்தில் உள்ள சமுத்திரம் ஏரி மாமன்னன் ராஜராஜ சோழன் காலத்தில் உருவாக்கப்பட்டது. இந்த ஏரியில் சூழந்துள்ள ஆகாயத்தாமரை நீர் ஓட்டத்தை தடுப்பதால் விவசாயத்துக்கு முழுமையான பலனை கிடைக்காத நிலை உள்ளது.வண்டு மூலம் ஆகாயத் தாமரையை கட்டுப்படுத்த முதல் கட்டமாக நேற்று 400 வண்டுகள் சமூத்திரம் ஏரியில் விடப்பட்டுள்ளது. வண்டு மூலம் ஆகாயத்தாமரை கட்டுப்படுத்தப்பட்டு தண்ணீர் வடிந்து விவசாயத்துக்கு முழுமையான பலனை தரும். தொடர்ந்து மாவட்டத்தில் மற்ற பகுதிகளில் ஆகாயத்தாமரை உள்ள நீர்நிலைகளில் வண்டுகள் விடப்படும்.இவ்வாறு கலெக்டர் சண்முகம் பேசினார்.வேளாண் இணை இயக்குனர் லோகநாதன்,

தோட்டக்கலை துணை இயக்குனர் ராமதாஸ், நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சந்திரசேகரன், உதவி பேராசிரியர் மதிராஜன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கலியபெருமாள், பஞ்சாயத்து தலைவர் தனசேகரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**குவிண்டால் நெல்லுக்கு ரூ.150 ஊக்கத்தொகை வழங்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,00:46 IST

திருத்துறைப்பூண்டி: "விவசாயிகளுக்கு நெல் குவிண்டால் ஒன்றுக்கு ஊக்கத்தொகையாக 150 ரூபாய் மாநில அரசு வழங்க வேண்டும்' என எம்.எல்.ஏ., உலகநாதன் முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளார். தமிழக முதல்வருக்கு அவர் அனுப்பிய மனு: டெல்டா மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்யாமலும், மேட்டூர் அணை ஜூன் 12ல் திறக்கப்படாமல் ஜூலை 28ல் காலம் கடந்து திறக்கப்பட்டது. காலம் கடந்த நேரடி விதைப்பிலும், சம்பா நடவுப்பணியிலும் ஈடுபட்ட விவசாயிகள் தண்ணீர் இன்றி கடும் சிரமத்துடன் விவசாயத்தை மேற்கொண்டனர். நவம்பர் மாதத்தில் பெய்த தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் பெருமளவில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. எல்லாம் இழந்த நிலையில் உள்ள விவசாயிகளை காத்திடவும், அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் தமிழக அரசு நெல் விலையை உயர்த்தி அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் 2009 - 10ம் ஆண்டு சன்னரக நெல் குவிண்டால் ஆயிரத்து 100க்கும், பொதுரக நெல் ஆயிரத்து 50க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. நடப்பாண்டில் நெல் கொள்முதல் துவங்குகிறது. டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி நடப்பு கொள்முதல் பருவத்தில் குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசின் விலையான சன்னரகம் ஆயிரத்து 100க்கும், பொது ரகம் ஆயிரத்து 50 வழங்குவதுடன், மாநில அரசு ஊக்கத்தொகையாக குவிண்டாலுக்கு 150 ரூபாய் வழங்க

வேண்டும். மழை மற்றும் பனிக்காலத்தில் அறுவடை துவங்குவதால் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு 22 சதவீதம் வரை ஈரப்பதம் வைத்து கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**டெல்டாவில் மீண்டும் தொடர்மழை :அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பெரும் தவிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 30,2010,01:21 IST

திருத்துறைப்பூண்டி: காவிரி டெல்டா கடைமடை பகுதியில் மீண்டும் மழை பெய்ய துவங்கியதால் அறுவடைக்கு தயாரான நெற் கதிர்களை அறுவடை செய்ய இயலாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.காவிரி டெல்டா பாசனத்துக்கு ஜூன் 12ல் திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை காலம் கடந்து ஜூலை 28ம் தேதி திறக்கப்பட்டது. கடைமடை பகுதிக்கு தண்ணீர் முழுமையாக வந்து சேரும் முன்னரே முறை வைத்து தண்ணீர் திறக்கப்பட்டதால் விவசாய பணிகளில் தொய்வு ஏற்பட்டு காலதாமதமாக தொடங்கப்பட்டது.வடகிழக்கு பருவமழை நவம்பர் மாதத்தில் தொடர்ந்து பெய்ததால் இப்பகுதியில் ஓடும் கோரையாறு, பாமணியாறு, அரிச்சந்திரா நதி ஆகியவற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டு லட்சக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்த ஒரு போக சம்பா சாகுபடி நெற்பயிர்கள் நீரில் மூழ்கி பாதிக்கப்பட்டது. ஒரு சில இடங்களில் பயிரிடப்பட்டிருந்த சம்பா பயிர் நெற்கதிர்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டன. தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் மீண்டும் வங்க கடலில் ஏற்பட்டுள்ள புயல் சின்னம் காரணமாக காவிரி டெல்டா கடற்கரையோர மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாக மழை பெய்ய துவங்கியுள்ளது. இதனால் அறுவடை செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கடன் வாங்கி சாகுபடி செய்து மகசூல் பெற வேண்டிய நிலையில் அதை வீடு கொண்டு சேர்க்க முடியாத வேதனையில் விவசாயிகள் உள்ளனர்.*

வேதாரண்யத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்கு பின் மீண்டும் இரண்டு நாட்கள் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கையும், விவசாயமும், பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று காலை எட்டு வரை 57.4., மில்லி மீட்டர் மழையும், தலைஞாயிறில் 30 மி.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது.கடல் சீற்றமாக காணப்படுவதால் கோடியக்கரை, ஆறுக்காட்டுத்துறை, புஷ்பவனம், வெள்ளப்பள்ளம், வானவன் மகாதேவி, போன்ற கடற்கரை கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் இரண்டாவது நாளாக கடலுக்குள் செல்லவிலை. நேற்று மதியம் லேசான சூரிய வெளிச்சம் தெரிந்தது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***தமிழக கடலோர மாவட்டங்களில் சில இடங்களில் இன்று மழை பெய்யும் வானிலை மையம் அறிவிப்பு***

*சென்னை, டிச.31–*

*இலங்கைக்கு அருகே வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை பெய்துள்ளது. இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரி கூறியதாவது:–*
*அடுத்த 24 மணி நேரத்திற்கு தமிழக கடலோர மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும். சென்னையில் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.நேற்று காலை 8.30 மணி நிலவரப்படி தரங்கம்பாடி, திருமயம் தலா 2 செ.மீ. மழையும், ஒரத்தநாடு, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை, பாம்பன், ஜெயங்கொண்டம் தலா 1 செ.மீ. மழையும் பெய்துள்ளது.*
*இவ்வாறு அதிகாரி தெரிவித்தார்.*

***விலைவாசி உயர்வு கவலை அளிப்பதாக பிரணாப் முகர்ஜி தகவல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிப்பு***

*புதுடெல்லி, டிச.31–*

*"விலைவாசி உயர்வு கவலை அளிப்பதாக இருக்கிறது. விலைவாசி உயர்வை தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மத்திய நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.*

*விலைவாசி உயர்வு*

*2010–ம் ஆண்டின் தொடக்கம் முதல் படிப்படியாக விலைவாசி உயர்ந்து வருகிறது. இந்த ஆண்டின் கடைசி மாதமாகிய டிசம்பர் 18–ந்தேதி வரை முடிந்த 10 வாரங்களில், உணவுப்பொருள் விலை 14.44 சதவீதம் உயர்ந்து இருக்கிறது. இது பற்றி மத்திய மந்திரி பிரணாப் முகர்ஜியிடம் நிருபர்கள் கேட்டனர். அதற்கு பதில் அளித்து அவர் கூறியதாவது:–*

*விலைகள் உயர்ந்து இருப்பது உண்மை*

*சமீபத்தில் வெங்காயம் போன்ற பொருட்கள் விலை உயர்ந்து இருக்கிறது. இந்த விலை உயர்வு அடிப்படை மற்றும் இயற்கை காரணங்களால் ஏற்பட்டது என்று முதலில் கருதினோம். ஆனால் அடிப்படை காரணங்கள் தவிர, உண்மையிலேயே விலை உயர்ந்து இருப்பதை உணருகிறோம்.*

***நாட்டின் உணவு பொருள்களுக்கான பணவீக்கம் 14.44%–ஆக உயர்வு***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி, டிச.31–*

*நாட்டின் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், டிசம்பர் 18–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 14.44 சதவீதமாக அதிகரித்துள்ளது. உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் தொடர்ந்து ஐந்து வாரங்களாக உயர்ந்து வருகிறது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 12.13 சதவீதமாக இருந்தது. ஆக, இவ்விரு வாரங்களுக்கிடையில் இது 2.31 சதவீதம் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*வெங்காயம்*

*சென்ற ஆண்டின் இதே வாரத்தில், உணவு பொருள்களுக்கான பணவீக்கம் 21.29 சதவீதம் என்ற அளவில் மிகவும் அதிகரித்து இருந்தது.*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், வெங்காயத்தின் விலை மிகவும் உயர்ந்திருந்தது. ஆண்டு கணக்கில் இதன் விலை 40 சதவீதம் அதிகரித்து, சில்லரை விற்பனையில் ஒரு கிலோ ரூ.75–80 வரை சென்றது என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில், பெட்ரோலிய பொருள்களை சந்தைப்படுத்தும் நிறுவனங்கள், ஒரு லிட்டர் பெட்ரோல் விலையை ரூ.3 அதிகரித்தது. இதனால், எரிபொருள்களுக்கான குறியீட்டு எண் 11.63 சதவீதமாக மிகவும் அதிகரித்துள்ளது.*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், கறிக்கோழி (18%), ஊறுகாய், நறுமண பொருள்கள், பழங்கள், காய்கறிகள், கடலை பருப்பு (தலா 3%), கம்பு மற்றும் சோளம் (தலா 1%) போன்றவற்றின் விலை அதிகரித்திருந்தது. அதேசமயம், உள்நாட்டு மீன் வகைகள் (4%), துவரம் பருப்பு (2%), கடல்மீன் வகைகள் மற்றும் உளுந்து (தலா 1%) ஆகியவற்றின் விலை குறைந்திருந்தது.*

*பொது பணவீக்க விகிதம்*

உணவு சாராத பிரிவின் கீழ் கச்சா பட்டு (8%), மலர்கள் (6%), கச்சா ரப்பர் (4%), ஆமணக்கு மற்றும் பருத்தி விதை (தலா 1%) போன்றவற்றின் விலை அதிகரித்திருந்தது. அதேசமயம், எள் (2%), ஆளிவிதை, கொப்பரை தேங்காய் (தலா 1%) போன்றவற்றின் விலை சற்று குறைந்திருந்தது.

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் நாட்டின் பொது பணவீக்க விகிதம், சென்ற நவம்பர் மாதத்தில் 7.48 சதவீதமாக குறைந்து இருந்தது. இது, அக்டோபர் மாதத்தில் 8.58 சதவீதமாக இருந்தது.

**கடனை தள்ளுபடி செய்ய கோரி**

**கொய்மலர் விவசாயிகள் உண்ணாவிரதம்**

ஊட்டி, டிச.31–

ஊட்டியில், நீலகிரி மாவட்ட கொய்மலர் விவசாயிகள் கடன் தள்ளுபடி செய்ய கோரி உண்ணாவிரதத்தில் ஈடு பட்டனர்.

விவசாயிகள் போராட்டம்

நீலகிரி மாவட்டம் தேயிலை மற்றும் சுற்றுலா துறையை நம்பி உள்ளது. கடந்த 2000–ம் ஆண்டில் நீலகிரி மாவட்டத் தில் பச்சை தேயிலைக்கு விலை குறைவு ஏற்பட்ட போது விவசாயிகள் பல்வேறு போராட்டங்களை நடத்தி னார்கள்.

அப்போது தேயிலை விவசாயம் செய்யும் விவசாயி களுக்கு பொருளாதாரம் மேம் படுத்த மாற்று விவசாயமாக கொய்மலர் சாகுபடி செய்ய தமிழ்நாடு அரசும், மத்திய அரசும் நடவடிக்கை எடுத்தது.

இதன்படி நீலகிரி மாவட்ட விவசாயிகள் தோட்டக்கலை துறை மற்றும் மத்திய அரசு உதவியுடன் வங்கிகளில் இருந்து கடன் பெற்று பசுமை குடில்கள் அமைத்து, கொய் மலர் சாகுபடி செய்தனர்.

இந்த கொய்மலர் சாகுபடி செய்ய தனியார் கம்பெனிகள் கொடுத்த விதைகள், நாற்றுக்கள் தரம் இல்லாத காரணத்தாலும், நீலகிரி மாவட்டத்தில் புயல் மற்றும்



ஊட்டி ஏ.டி.சி. திடலில் நீலகிரி மாவட்ட கொய்மலர் விவசாயிகள் கடன் தள்ளுபடி செய்ய கோரி உண்ணாவிரதம் இருந்த போது எடுத்த படம்.

*பருவமழை காரணமாக பசுமை குடில்கள் பாதிக்கப் படுவதால் கொய்மலர் விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.*

*உண்ணாவிரதம்*

*இதன் காரணமாக கொய் மலர் விவசாயிகளுக்கு வங்கிக ளில் வழங்கப்பட்ட கடன்களை தள்ளுபடி செய்ய கோரி கடந்த 8 மாதங்களாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.*

*நேற்று நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி மற்றும் சிறு விவசாயிகள் சங்கம் சார்பில் கொய்மலர் விவசாயிகள் தங்கள் வங்கியில் வாங்கிய கடன்களை ரத்து செய்ய கோரி ஊட்டி ஏ.டி.சி. சுதந்திர திடலில் மாவட்ட தலைவர் விஸ்வநாதன் தலைமையில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.*

*இந்த போராட்டத்தில் மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணை தலைவர் சந்திர சேகரன், மாவட்ட பொருளா ளர் ராமமூர்த்தி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் கணபதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.*

*உண்ணாவிரத போராட்டத் தை மாநில பசுமைக்குடில் விவசாயிகள் சங்க தலைவர் ஆனுர் பிரகாஷ் தொடங்கி வைத்தார். நீலகிரி மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர் ஏ.பெள்ளி வாழ்த்தி பேசினார்.*



மஞ்சனக்கொரை பகுதியில் வனத்துறை சார்பில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி நடந்தது.

### மஞ்சனக்கொரை பகுதியில், வனத்துறை சார்பில்

# கால்நடைகளுக்கு இலவச தடுப்பூசி முகாம்

ஊட்டி, டிச.31–

நீலகிரி தெற்கு கோட்ட வனக்கோட்டத்திற்கு உட்பட்ட ஊட்டி தெற்கு வனச்சரகத்தின் சார்பில் மஞ்சனக்கொரை பகுதியில் கால்நடைகளுக்கு இலவச தடுப்பூசி போடும் பணி நடைபெற்றது. வனங்களின் அருகே உள்ள பகுதிகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் வன விலங்குகளுக்கு தொற்றி அவைகள் உயிரிழக்க வாய்ப்பு உள்ளது. இதனை தடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன்படி தற்போது நீலகிரி மாவட்டத்தில் வனங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு தொற்று நோய்கள் எதும் ஏற்படாமல் தடுக்க அவைகளுக்கு தடுப்பூசி போடுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டு தற்போது தடுப்பூசி போடும் பணி நடந்து வருகிறது.

இதன்படி தெற்கு வனக்கோட்டத்திற்கு உட்பட்ட அவலாஞ்சி, ஊட்டி அருகே உள்ள மஞ்சனக்கொரை பகுதியில் உள்ள வளர்ப்பு கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் முகாம் நடைபெற்றது. இதில் ஊட்டி கால்நடை டாக்டர் சுகன்யா கலந்து கொண்டு, கால்நடைகளுக்கு இலவசமாக தடுப்பூசிகள் போட்டார். மேலும் ஊட்டி தெற்கு வனச்சரகர் சுந்தர்ராஜன் கலந்து கொண்டு, கால்நடைகளுக்கு ஆந்த்ராக்ஸ் போன்ற கொடிய நோய்கள் பற்றியும், அவற்றின் மூலம் வன விலங்குகளுக்கு தொற்று நோய் ஏற்படுவது பற்றியும், இதனால் விலங்குகளுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்தும் விளக்கி பேசினார். முகாமில் வனவர் சிவாப்பன், வனக்காப்பாளர் சதீஷ் மற்றும் பன்னீர்குமார் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.